# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | பங்குனி - 05 | 19-03-2003 | புதன்கிழமை | ஓசை 29



தேவையை நிறைவு செய்து நேரத்தை மீதப்படுத்த புடவைத் தெரிவுக்கு வவுனியா நகரில்...

SHANDHA TEX

பஜார் வீதி, வவுனியா.

T.P:24-22879 (சி-7649)


### பாரிய யுத்த நிறுத்த மீறல்களைத் தவிர்க்க

# யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு மேலும் அதிகாரங்கள் வழங்க இணக்கம்!

## மூன்று வாரத்திற்குள் கிளிநொச்சியில் இறுதி முடிவெடுக்கும் கூட்டம்

**விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது போன்ற பாரதூரமான யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் இடம்பெறாதவகையில் தடுக்கும் நோக்கில் - யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்குச் சில அதிகாரங்களை வழங்கி முழுஅளவில் யுத்தநிறுத்தத்தைப் பேணும் பணியினை அவர்களிடம் ஒப்படைப்பதென நேற்று நடந்த பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கான முடிவு மூன்று வார காலத்திற்குள் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும், கடற்படைக்கும், கண்காணிப்புக் குழுவிற்கும் இடையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் எடுப்பதெனவும் உடன்பாடு காணப்பட்டது.**

நேற்று ஜப்பானில் ஹைக்கோன் நகரில் நடந்த ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் முதலாம் நாள் பேச்சுவார்த்தையின்போதே இம்முடிவு எடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிப்புப் போன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் தடுக்கப்பட வேண்டும் எனவும், அதற்கெனக் கண்காணிப்புக்குழுவிற்கு மேலும் அதிகாரங்கள் வழங்கப்பட்டு அவர்க

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைக்கு முன் பாலசிங்கம்-பீரிஸ் சந்திப்பு

சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதற்கு முன்னர் அரச குழுவிற்கு தலைமைதாங்கிச் சென்ற அமைச்சர் பீரிசும், விடுதலைப்புலிகள் குழுவிற்கு தலைமைதாங்கிச் சென்ற அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கமும், தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

முரண்பாடுகளைக் களைவதையும் புலிகளின் வர்த்தகக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விவகாரத்தால் எழுந்த பதட்டத்தைத் தணிப்பதையும் இலக்காகக்கொண்டு கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

### அகாஷியுடன் சந்திப்பு

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும், ஜப்பானிய விசேட தூதுவர் யசுகி அகாஷியும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். ஜப்பானிய நேரப்படி நேற்றுக் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணி வரை இச்சந்திப்பு நடைபெற்றது. இதன் பின்னர் மதியம் 12.00 மணிக்கு யசுகி அகாஷி மதியபோசன விருந்து ஒன்றையும் வழங்கினார்.

## அடுத்தசுற்று தாய்லாந்தில்!

சிறிலங்கா அரசாங்கப் பிரதிநிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கு மிடையிலான அடுத்தசுற்று சமாதானப் பேச்சுவார்த்தை தாய்லாந்தில் நடைபெறவுள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் மூழ்கடிக்கப்பட்டமைக்கு கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ளோம்

### ஜப்பானில் முதல் நாள் பேச்சுக்குறித்து அன்ரன் பாலசிங்கம்

திருகோணமலைக்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் நிகழ்ந்த துயரமான சம்பவம் குறித்து நாம் கடுமையான ஆட்சேபனையை நேற்றைய பேச்சுவார்த்தையின் போது தெரிவித்தோம் என நேற்று ஜப்பானில் இடம்பெற்ற ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின் செய்தியாளரிடம் பேசிய புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்தார்.

நேற்றைய பேச்சு வார்த்தைகள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

அதில் சில முக்கியமான விடயங்களை நாங்கள் குறிப்பிட்டோம். இந்தச் சம்பவம் சர்வதேசக் கடற்பரப்பில் அதாவது திருகோணமலைக்கு அப்பால் 220 கடல்மைல் தொலைவில் நிகழ்ந்திருக்கிறது

(08 ஆம் பக்கம் பார்க்க)

## உருவப்படம் இணைப்பு

அன்னை பூபதியின் உருவப் படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து

## இராணுவத்தை வெளியேற்ற நிதி ஒதுக்கீடு இல்லையாம்!

உயர்பாதுகாப்பு வலயங்களிலும் அதற்கு வெளியேயும் பொது மக்களின் வீடுகளில் நிலைகொண்டுள்ள படையினரை உடனடியாக வெளியேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு இல்லை என சிறிலங்கா அரச பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பானில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையில்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதியின் நினைவு நாட்கள் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

### கிராம ரீதியாக உண்ணாவிரதங்கள், சிரமதானங்களுக்கு ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

தியாகி அன்னை பூபதியின் நினைவு நாள் இன்று உணர்வெழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் நிர்வாகச் செயலகங்கள், காவல் பணிமனை ஆகியவற்றில் விசேடமாக அமைக்கப்பட்ட இடத்தில் அன்னைபூபதியின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டுள்ளதுடன், சுடரேற்றி மலர்மாலை அணிவித்து வணக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று காலை 9.00மணிக்கு தேசியக்கொடியேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். பொதுச்

(08 ஆம் பக்கம் பார்க்க)





# மனித உரிமை ஆணைக்குழுவிற்கான நிதி ஒதுக்கீட்டில் திறைசேரி வெட்டு!

(கொழும்பு)

போதிய நிதி ஒதுக்கீடு இன்மையால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பெரும் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகத் தெரியவருகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது செயற்பாடுகளுக்காக 40 மில்லியன் ரூபாவை திறைசேரியிடம் கேட்டிருந்த போதிலும் 1.6 மில்லியன் ரூபா மட்டுமே கிடைத்துள்ள்தாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஆண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான நிதி ஒதுக்கீடு 09 மில்லியன் ரூபாவால் குறைக்கப்பட்டது.

இந் நிதி நெருக்கடி காரணமாக அலுவலகத்திற்கான மாதாந்த வாடகையைச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், பத்துப் பிராந்திய அலுவலகங்களையும் பராமரிக்க முடியாத இக்கட்டான நிலை தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.


## 11ஆம் ஆண்டு நினைவலைகள்

**லெப்ரினன்ட் ஆதவன்/ஜேம்சன்**
**சுப்பிரமணியம் பிரபாகரன்**

தாயின் அணைப்பில் 1972 – 03 – 06
ஈழத்தாயின் அரவணைப்பில் 1992 – 03 – 19

சிங்களப்படை சிதையுண்ட காலம்
இந்தியப்படை வல்லமை காட்டிய நேரம்.
ஈழத்தாய் துயர்துடைக்க – பிரபா
சேனையிலே களமாடிய வேங்கைப் புலியே
உந்தன் செங்குருதி சிந்திய வழிநோக்கி
எம் விழிகள் சொரியும் என்றும் கண்ணீர்......
உன் நினைவுடன் சுவடுகள் நனைந்தபடி

அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி, அத்தான் மார், அக்காமார், தம்பிமார், உறவினர்கள், போராளிகள்

*தகவல் :- S.சுதர்சன்*
*முள்ளிவாய்க்கால் மேற்கு*
(2809)



## மங்களகரமான திறப்பு விழா

**வன்னி வாழ் விவசாயிகளே!**
**உங்களுக்கு ஓர்**

CIC **நற்செய்தி**

**இன்று (19-03-2003) தொடக்கம்**

சி.ஐ.சி நிறுவனத்தினரின் உற்பத்திப் பொருட்களான கிருமி நாசினிகள், உரவகைகள், விதை வகைகள் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்,

**நல்லைமுருகன்**

**வேளாண் வேதியல் இடுபொருள் வாணிபம்**

**இல:- 451, முல்லை -பரந்தன் நெடுஞ்சாலை, தருமபுரம்.**

**NALELAMURUGAN**
Agro chemical Traders

(3029)



## இலவச மருத்துவ முகாம்

வெளிநாட்டிலிருந்து வருகைதந்திருக்கும் மருத்துவ நிபுணர் குழுவினர் எமது மருத்துவமனையில் இலவசமாக மருத்துவ ஆலோசனைகளையும், சிகிச்சைகளையும் வழங்கவுள்ளார்கள்.

| | | | |
|---|---|---|---|
| காலம்:- 20.03.03 | வியாழன் | மாலை 3.00 - | மாலை 6.00 மணிவரை |
| 21.03.03 | வெள்ளி | காலை 8.00 - | மாலை 4.00 மணிவரை |
| 22.03.03 | சனி | காலை 8.00 - | மாலை 4.00 மணிவரை |

வழங்கப்படவிருக்கும் சேவைகள்:

- மனநோய் மருத்துவம்
- உளவள சிகிச்சை
- பற்சிகிச்சை

பயன்பெறவிரும்புவோர் குறிப்பிட்ட தினங்களில் எமது மருத்துவமனை வெளி நோயாளர் பகுதிக்கு வருகை தரவும்.

**நிர்வாகம்,**
**Dr.பொன்னம்பலம் ஞாபகார்த்த**
**மருத்துவமனை.**
**கிளிநொச்சி.**

(சி-7811)


# இரண்டாவது உலக இந்து மாநாடு

## 02-05 மே 2003

*மாணவர்களுக்கான* பண்ணிசை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

**மேற்படி** மாநாட்டினை ஒட்டி முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே பின்வரும் திகதிகளில் **போட்டிகள்** புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய **மண்டபத்தில்** நடாத்தப்படும்

1. **பண்ணிசைப்போட்டி 20-03-2003 மு.ப. 9.00 மணி**
2. **கட்டுரைப் போட்டி 22-03-2003 மு.ப. 9.00 மணி**
3. **பேச்சுப் போட்டி 23-03-2003 மு.ப. 9.00 மணி**

மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் குறிப்பிட்ட திகதிகளில் போட்டிக்குத் தயாராகச் சமுகமளிக்கும் படியும் கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் புதிதாகப் பங்கேற்க வரும் மாணவர்கள் 21-03-2003ஆம் திகதி அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தில் மாணவர் பெயர், பிரிவு, பாடசாலை போன்ற விபரங்களுடன் திரு. பொ. பேரின்பநாயகம் பிரதிக் கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளும் படியும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமார் அறியத்தருகின்றார்.

(சி-8020)

# சதாம் வெளியேற 48 மணிநேர காலக்கெடு; தவறினால் போரை எதிர்கொள்ள வேண்டும்!

## அங்கீகாரமற்ற போரிற்கு அமெரிக்கா தயாராகிறது

**ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைனும் அவரது குடும்பத்தினரும் 48 மணிநேரத்திற்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. இதற்கு இணங்காவிட்டால் ஈராக் போரைச் சந்திக்க வேண்டும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நேற்று அறிவித்தார்.**



குவைத் பாலைவனத்தில் இரசாயன தாக்குதலிலிருந்து பாதுகாப்புத் தேடும் பயிற்சியிலீடுபடும் பிரிட்டிஷ் படையினர்.

நேற்றுக்காலை இது தொடர்பாக அமெரிக்க மக்களுக்கு தொலைக் காட்சிமூலமாக 13 நிமிடங்கள் சனாதிபதி புஷ் உரையாற்றினார். இதன்போது சதாம் நாட்டைவிட்டு வெளியேறாத பட்சத்தில் அமெரிக்கா தெரிவு செய்யும் நேரத்தில் போர் தொடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மரணித்துக் கொண்டிருக்கும் ஓர் ஆட்சிக்காக உயிர்களைத் தியாகம் செய்ய வேண்டாம் என்று அவர் ஈராக்கிய வீரர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எவ்வாறேனும் எமது தலைவர் நாட்டைவிட்டு வெளியேறமாட்டார் என்று ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் நஜிசப்ரி நேற்று புஷ்சின் அறிவிப்பைத் தொடர்ந்து கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் காலக்கெடுவை ஈராக் நிராகரிப்பதாகவும், இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

அமெரிக்கா முன்னெடுக்கும் போரிற்கு சட்டபூர்வ அங்கீகாரம் கிடைக்காது என ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் எச்சரித்துள்ள நிலையில் அதனையும் மீறி யுத்த முன்னெடுப்புக்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, பிரான்ஸ் அமெரிக்காவின் புதிய அறிவிப்புக்கு கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது. சதாம் ஹுசைனுக்கு வழங்கப்பட்டுள்ள காலக்கெடுவை உலகம் ஏற்றுக்கொள்ளாது ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சின் நடவடிக்கையை ஐ.நா பாதுகாப்புச் சபை எதிர்ப்பதாக பிரான்ஸ் சனாதிபதி அலுவலகம் நேற்று பாரிசில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்குறிப்பிட்டுள்ளது.

இந்த ஒரு தலைபட்சமான நடவடிக்கை பாதுகாப்பு சபையினதும் உலக நாடுகளினதும் கருத்துக்களுக்கு எதிராக அமைந்துள்ளது எனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் கண்காணிப்பாளர்களும், சில வெளிநாட்டு தூதரகங்களின் அதிகாரிகளும் ஈராக்கை விட்டு வெளியேற ஆரம்பித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### பிளேயருக்கு நெருக்கடி

(லண்டன்)

ஈராக் மீதான போருக்கான ஏற்பாடுகளை அமெரிக்காவுடன் இணைந்து மேற்கொண்டுவரும் பிரிட்டன் பிரதமரின் நடவடிக்கையைக் கண்டித்து அவரது அமைச்சரவை உறுப்பினர் ஒருவர் நேற்று பதவி விலகினார்.

பிரிட்டிஷ் அமைச்சரவையின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரான ராபிட்சன் தனது பதவி விலகலை நேற்று அறிவித்தார்.

### இத்தாலியில் வாகன விபத்து 12பேர் பலி; பலர் படுகாயம்

(ரோம்)

இத்தாலியில் நடந்த வீதி விபத்தொன்றில் 12 பேர் பலியாகியுள்ளதோடு 80 பேர் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

கார்கள் நிறுத்தி வைக்கும் பகுதியிலேயே இந்த விபத்து நேரிட்டுள்ளது. இதனால் 200 கார்கள் முழுமையாக சேதமடைந்துள்ளன. வேகமாக வந்த ட்ரக் வண்டியொன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களுடன் மோதிய போதே இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிசார் கூறியுள்ளனர்.

அத்தோடு இத்தாலியின் வெனிசிலில் நகரில் மிக மோசமான விபத்துக்கள் அடிக்கடி நிகழ்வதாக பொலிஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.



கெய்ரோ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற யுத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பெண் ஒருவர் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை முழங்குகின்றார்.

### இஸ்ரேலியப் படையினரின் அத்துமீறலுக்கு ஐ.நா.பொதுச்செயலாளர் கண்டனம்

இரண்டு நாட்களில் இஸ்ரேலியத் தாக்குதலில் பதினொரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கொபி அனான் இஸ்ரேலைக்கண்டித்துள்ளார்.

காசா பள்ளத்தாக்கில் கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதாகக் கூறிக் கொண்டாலும் பொதுமக்களைப் பாதுகாக்க அந்நாட்டு இராணுவம் தவறிவிட்டது என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

குறிப்பாக நான்கு வயதான சிறுமி சுட்டுக்கொல்லப்பட்டதையும் சமாதான ஆர்வலரான அமெரிக்க பிரஜை இஸ்ரேலிய இராணுவத்தின் வாகனத்தால் ஏற்றிக் கொல்லப்பட்டதைக் கொபி அனான் சுட்டிக்காட்டியுள்ளார்.

காசா பள்ளத்தாக்கில் உள்ள அகதிமுகாமில் நிகழ்ந்த இரத்தக் களறி இஸ்ரேல்-பலஸ்தீன சமாதான முயற்சிகளைப் பெரிதும் பாதித்துள்ளது குறிப்பிடத்தக்கது.



ஆப்கானின் சலர்னோ இராணுவ முகாமில் உலங்கு வானூர்தியிலிருந்து பொருட்களை எடுத்து வரும் அமெரிக்க (இடது), இத்தாலியப் படைவீரர்கள்.

### பிராந்தியங்களுக்கு அதிக அதிகாரம் பிரான்ஸ் பாராளுமன்றம் அங்கீகாரம்

(பாரிஸ்)

பிரான்ஸ் பாராளுமன்றம் அதிகாரங்கள் குறைவான பிராந்தியங்களுக்கு அதிகாரங்களை பெற்றுக்கொடுக்கும் திட்டம் ஒன்றை அங்கீகரித்துள்ளது.

பிரதமர் இந்தத் திட்டத்தின் மூலம் தமது மதிப்பை உயர்த்த முனைந்துள்ளார். இதன் பிரகாரம் சில பிராந்தியங்கள் தமக்கே உரித்தான மின்வலு மற்றும் எரிபொருள் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டங்கள் தொடர்பான தேசிய ரீதியிலான கருத்துக் கணிப்பொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் எண்ணியிருந்தது எனினும் அதற்குப் பதிலாக பாராளுமன்றத்தின் மேல் சபை, கீழ்சபை ஆகியவற்றின் ஊடாக திருத்தங்களை விவாதித்து அரசியல் யாப்புத் திருத்தங்களின் மூலம் மாத்திரமே இவற்றை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது!

### அயோத்தி அகழ்வாராய்ச்சியில் பொருட்கள் சில மீட்பு

(புதுடில்லி)

அயோத்தியில் இராமர் ஜென்ம பூமிப் பகுதியில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள தொல்பொருள் ஆய்வாளர்கள்குழு சில தட்டைப் பொருட்களை மீட்டுள்ளது.

நான்காவது நாளாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது இவை மீட்கப்பட்டன.

அடுப்பு போன்ற மூன்று பொருட்கள் ஒரு பள்ளத்தைத் தோண்டும் போது மீட்கப்பட்டன. இந்த அடுப்புக்கள் கிழக்குத் திசை நோக்கி காணப்பட்டன. தகர்க்கப்பட்ட கட்டடத்தின் ஒரு சுவரும் மற்றும் தரைப் பகுதியும் கடந்த சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளன.

### மர்ம ஆட்கொல்லி நோய் தொடர்பாக எச்சரிக்கை!

கடுமையான நிமோனியா நோயாக உருவெடுக்கும் மர்மமான ஆட்கொல்லி குறித்து உலகெங்கும் உள்ள வைத்தியசாலைகளில் ஆராய்ச்சி நடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்குச் செல்லும் பயணிகள் கவனமாக இருக்க வேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் அமெரிக்காவின் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு என்பன ஆலோசனை வழங்கியுள்ளன.

சுவாசக் கோளாறுகளை ஏற்படுத்தும் இந்நோய் காரணமாக ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 170 பேரை இவ் ஆட்கொல்லி பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனா, கொங்கொங், வியட்நாம், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அதன் தாக்கம் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சமாதானத்திற்கு எதிரான சதிகளை முறியடிக்க ரணில் விக்கிரமசிங்க அரசால் முடியுமா?

பல்வேறு நெருக்கடிகளுக்கும் மத்தியில் புலிகள்-அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தை ஆறாவது சுற்றை அடைந்திருக்கிறது. ஆரம்பத்தில் மிகவும் சுமுகமான சூழ் நிலையில், பல திருப்புமுனையான முடிவுகளுடன் நடை பெற்ற இப்பேச்சுவார்த்தையானது பின்னர் பல நெருக்கடி களைச் சந்தித்தது. இப்போது ஓர் இறுக்கமான நிலையை அடைந்திருக்கிறது.

பல ஆண்டுகாலம் புரையோடிப்போன பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் இலகுவானதாக இராது என்பது எவரும் எதிர்பார்க்கக் கூடியதே. ஆனால் ஆரம்ப காலத்திலிருந்து ஒரே பிரச் சினை குறித்தே பேசப்படுகின்ற போதிலும் சலிப்படையாது பேச்சுக்களில் ஈடுபட்டு வந்த வர்கள் புலிகள். ஆனால் அவர்களின் பொறு மையைச் சோதிக்கும் வகையிலான சம்ப வங்கள் நடைபெற்று வருவதால் பேச்சு வார்த்தை இறுக்கமான நிலைக்குத் தள்ளப் பட்டு வருவது முன்னர் குறிப்பிட்டதற்கு மாறுபாடானதொன்றாகும்.

அதாவது, பேச்சுவார்த்தையில் முக்கிய விடயங்கள் அல்லது அடிப்படைக் கோரிக் கைகளில் முரண்பாடுகள் ஏற்பட்டு அதில் முட்டுக்கட்டை ஏற்படுமானால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும். ஆனால் சிறிலங்காப் படையினரின் பகைமைப் போக்கினாலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினது குழப்பியடிக்கும் செயல் களாலும் தற்போது தோன்றியுள்ள இறுக்கநிலை அவர்களால் வலிந்து உருவாக்கப்பட்டதாகும்.

கடந்த வாரம் விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பல் மீது சிறிலங்கா கடற்படை நடத்திய தாக்குதல், பேச்சுவார்த்தை தொடருமா? அல்லது இடைநிறுத்தப்பட்டு விடுமா? அல்லது சமாதான முயற்சிகளே முறிவடைந்து விடுமா? என்பன போன்ற ஐயப்பாடுகளையெல்லாம் எழுப்பியது.

இது மக்கள் மத்தியில் எழுந்த ஐயப்பாடு மட்டுமல்ல உலக வங்கியின் இலங்கைக்கான இயக்குநரும் இந்தச் சந்தேகத்தை எழுப்பி "பேச்சுவார்த்தை இல்லையெனில் நிதி உதவியும் இல்லை" எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தச் சமாதான நடவடிக்கைகள் மூலம் தமக்கு நிம்மதியான சுதந்திரத்துடன் கூடிய வாழ்க்கை கிட்டவேண்டும் என்பதே குறிக்கோளாக உள்ளது. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்த வரை இந்தச் சமாதான நடவடிக்கைகள் மூலம் அதல பாதாளத்தில் தள்ளப்பட்டிருக்கும் சிறிலங்காவின் பொருளாதாரத்தைத் தூக்கி நிமிர்த்திவிட முடியுமா? என்றே பார்க்கிறது.

கடந்த காலத்தில் அதிலும் குறிப்பாக சனாதிபதி சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்ட தீவிரமான யுத்தத்தின் எதிரொலியாகச் சீரழிந்து போயுள்ள பொருளாதாரத்தைச் சீர்செய்து விட முடியுமா? என்றே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பார்க்கிறது.

யுத்தநிறுத்தம் - புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டு ஒரு வருடம் கடந்து விட்ட நிலையில் சிறிலங்கா பொருளாதார ரீதியாகச் சில அனுகூலங்களைப் பெற்றுக் கொண்டுள்ளமை வெளிப்படையானதொன்றே. பங்குச் சந்தை, துறைமுகங்கள், உல்லாசப் பயணத்துறை என்பன புத்துயிர் பெற்றிருக்கின்றன. மேலும் பல சாதகங்களைப் பெற்றுள்ளன. இந்நிலை தொடருமானால் வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டு முதலீடுகள் என்பன வற்றைப் பெறமுடியும். அதன் மூலம் பொருளாதார இறுக் கத்தைத் தளர்த்த முடியும் என ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு நம்புகிறது.

வரும் யூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் போது அதிகளவு நிதி உதவி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. யுத்தத்தால் அழிந்து போயுள்ள வடக்குக் கிழக்கை புனர்நிர்மாணம் செய்யவும் நலிவடைந்துள்ள சிறிலங்காவின் பொரு



ளாதாரத்தைச் சீர்செய்யவும் இவ்வுதவியை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் நம்பியிருக்கிறது.

இவ்வாறான நிலையில் இவ்வுதவிகள், சமாதான நடவடிக்கைகள் நிலை பெறுமானால் மட்டுமே கிடைக்கும் என்பதும் வெளிப்படையாகும். இதனையே உலக வங்கியின் இலங்கைக்கான இயக்குநரும் வெளிப்படுத்தி

**வேலவன்**

யிருக்கிறார். எனவே எவ்வாறாயினும் சமாதான முயற்சிகள் தொடரவேண்டும் என்பதில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் விருப்பம் கொண்டதாகவே இருக்கும்.

ஆனால் இம்முயற்சியை எவ்வகையிலேனும் முறியடித்துவிடும் குறிக்கோளை எதிர்க்கட்சிக் கூட்டணி கொண்டிருக்கிறது. சமாதான முயற்சிகளுக்கு தான் முட்டுக் கட்டையில்லை என சனாதிபதி சந்திரிகா கூறிவருகின்ற போதும் அவை தொடருமாயின் தனது நிறைவேற்று அதிகாரம் செல்லுபடியற்றதொன்றாகிவிடும் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும்.

சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமாகத் தொடரும் பட்சத்தில் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கலைக்க முடியாது என்பதால் அவர் இது குறித்து பெரும் விசனம் கொண்டுள்ளார். அத்துடன் சிறிலங்காவின் ஏனைய அரசியல்வாதிகள் போன்றே இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்ட புகழ் எதிர்க்கட்சிக்கு கிடைத்துவிடக்கூடாது என்பதும் அவருடைய கருத்தாகும். அத்துடன் அவரது இனவாதச் சிந்தனையானது இந்தச் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையானதாகும்.

அதேவேளை, அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி. யானது யுத்த மூலமான தீர்வில் கொண்டுள்ள நம்பிக் கையை அனுசரிக்க வேண்டிய நிலையிலும் அவர் உள்ளார். அதாவது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராணுவத் தீர்வில் நம்பிக்கையற்றவர் அல்ல என்பதை அவரது ஏழு வருட ஆட்சிக் காலம் திடமாகவே வெளிப் படுத்தியது. ஆனால், அதில் கிடைத்த தோல்வி காரணமாக சனாதிபதி சந்திரிகா சமாதானத் தீர்வில் விருப்பம் கொண் டிருந்தாலும் ஜே.வி.பி.யுடனான கூட்டு அந்த வழியில் செல்ல அவரை அனுமதிக்காது.

இப்பொழுது இக்கூட்டு ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு விதித்துள்ள காலக்கெடு மூன்று மாதங்களாகும். இம்மூன்று மாதங்களுக்குள் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு வீட்டுக்கு அனுப்பப்படும் என்பது அவர்களது முடிவாகும். இவ்வாறு மூன்று மாதங்களைக் காலக் கெடுவாக அவர்கள் தேர்ந்தெடுத்ததற் குக் காரணம் இல்லாமலில்லை. அதா வது,ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற முன்னர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு வீழ்த்தப்பட வேண்டும் என்பதே பொ. ஐ.மு.-ஜே.வி.பி. கூட்டின் முக்கிய இலக்காகும்.

இம்மாநாட்டில் புலிகள் கலந்து கொள்வது இவ்விரு கட்சிகளுக்கும் பெரும் காழ்ப்புணர்ச்சியை ஏற்படுத்தி யிருக்கிறது. இதன்போது பெருமளவு உதவி கிட்டுமாயின் அது புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் சமாதான நடவடிக் கைகளுக்கும் கிடைத்த வெற்றியாகி விடும் என இவ்விரு கட்சிகளும் அச்சம் கொண்டுள்ளன.

எனவே, இதற்கு எதிரான பல நடவடிக்கைகளில் இவ்விரு கட்சிகளும் ஈடுபட்டுள்ளன. இம்மாநாட்டில் அரசாங்கத்துக்கு உதவிகளை வழங்க வேண்டாம் என கோரிக்கைகள் விடப்பட்டுள்ளன. இவ்விருகட்சிகளும் இணைந்து எதிர்ப்புப் பேரணிகள், போராட்டங்கள், பிரச் சாரங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இதன் உச்சக்கட்டமாகவே, யுத்தத்தை எவ்வாறேனும் தூண்டிவிட வேண்டும் என சனாதிபதி சந்திரிகா குமார துங்க எடுத்துவரும் முயற்சியாகும். தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள முப்படைகளின் துணையுடன் விடுதலைப் புலிகளுக்கு ஆத்திரமூட்டி யுத்தத்தை ஆரம்பித்துவிட அவர் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை வெளிப் படையாகத் தெரிகின்றது. இதன் மூலம் அவர் உலகளா விய ரீதியில் கடந்த காலங்களில் புலிகளுக்கு எதிராக மேற்கொண்டு வந்த பிரச்சாரத்தை உண்மையெனக் காட்டி விட முயல்கின்றார்.

அதேவேளை, சமாதான முயற்சிகள் தோல்வியடை யுமானால் அதன் பலத்தில் ஆட்சியைத் தொடரும் ரணில் விக்கிரசிங்கவின் ஆட்சியைக் கவிழ்த்துவிடவும் அவரால் முடியும். விடுதலைப்புலிகள் இந்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் தொடர்பாகக் காட்டிவரும் பொறுமையே சந்திரிகாவின் இந்தச் சதி நிறைவுறாமல் தடுத்து வரு கின்றது.

இது விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் படையினருக்கு வக்காலத்து வாங்கும் முயற்சியில் ஈடு படாது அவர்களது அடாவடிச் செயல்களைக் கட்டுப்படுத்த தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவது அவசிய மாகும். அல்லாவிடின் சமாதான முயற்சிகளுக்கும் அவரது அரசாங்கத்திற்கும் ஆபத்தே ஏற்படும்.

நாட்டின் நன்மையைச் சிந்திக்காது சுயநல நோக்குடன் காரியமாற்றும் சந்திரிகாவின் நடவடிக்கைகள் அவருக்கே கேடு விளைவிப்பதாக அமையும் என்பதும் வெளிப் படையாகும். □

# கப்பல் அழிப்பு, தமிழ்க் கைதிகள் நிலையை கண்டித்து மட்டு. அம்பாறையில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கியழிக்கப் பட்டதைக் கண்டித்தும் களுத்துறை தமிழ் அரசியல் கைதி களின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தும் நேற்று முன்தினம் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனால் களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி, செங்கலடி ஆகிய பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதோடு பொதுச்சந்தையும் இயங்கவில்லை.

மட்டக்களப்பு நகரிலும் பெரும்பான்மையான வர்த்தக நிலையங்கள் இயங்காததோடு பொதுச்சந்தையும் செயலிழந்து காணப்பட்டது. மட்டக்களப்பு மற்றும் பிரதேச செயலகங்கள் ஊழியர் வரவு குறைவினால் நண்பகலோடு மூடப்பட்டதுடன் நீதிமன்ற வழக்குகளும் மற்றொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டன. ஒட்டுமொத்தத்தில் மட்டக்களப்பு மாவட்டமே செயலிழந்து காணப்பட்டது.

# யாழ். பொது நூலகத்திற்கு கணினிகள் அன்பளிப்பு

யுனெஸ்கோ நிறுவனம் யாழ்ப்பாணம் பொதுநூலகத் திற்கு 23 கணினிகளை அண்மையில் அன்பளிப்புச் செய் துள்ளது.

இதனைக் கொண்டு பொதுநூலகக் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக யுனெஸ்கோ நிறுவனத்தின் இலங்கைப் புதுடில்லி பிராந்தியப் பணிமனையின் பிரதிநிதியான பிருதிவிராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பொதுநூலகத்தினை பலப்படுத்தும் முயற்சியின் கீழ் தமிழகத்திலுள்ள ராஜா அண்ணாமலைச் செட்டியார் ஆராய்ச்சி நூலகத்திலிருந்து பெறுமதியான நூல்களைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# போர் நிறுத்தத்தில் அரசு உறுதி காட்டாதவரை பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் கேள்விக்குறியே!

நடைபெறாது கூடப்போகலாம் என எதிர்பார்க்கப்பட்ட ஆறாவது சுற்றுச் சமாதானப் பேச்சுவார்த்தை நேற்று திட்டமிட்டபடி ஆரம்பமாகியுள்ளது. சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படை விடுதலைப்புலிகளின் சரக்குக் கப்பல் ஒன்றை தாக்கி மூழ்கடித்த மிகவும் பாரதூரமான யுத்த நிறுத்த மீறலின் பின்பும் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதான உறுதியான தீர்மானமே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கு இருந்த முட்டுக்கட்டையை நீக்கியது.

சிறிலங்கா ஆயுதப் படையினர் திட்டமிட்டரீதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான காலத்தில் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுகின்றார்களோ அன்றி அவர்களின் செயற்பாடு இத்தகைய காலங்களில் எதிர்பாராத வகையில் நிகழ்கின்றனவோ எதுவாக இருப்பினும் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பினர் மேற்கொள்ளும் பாரிய யுத்தநிறுத்த மீறல்கள் பெரும்பாலானவை சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு ஒரு வாரம் முன்னதான காலப் பகுதிக்குள் இடம்பெறுபவையாகவே உள்ளன.

இதேவேளை, இப்பேச்சுவார்த்தைக்கான காலப்பகுதியை மையமாக வைத்து தம்மாலான நடவடிக்கைகளை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பும் மேற்கொள்ளாமல் இல்லை. ஆகையினால், ஆயுதப் படையினரின் குழப்பும் நடவடிக்கைகளில் முக்கியமாக ஆராயப்படவுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்தன. அதாவது, சமஷ்டி முறை குறித்தும், வடக்கு - கிழக்கிற்கான நிதி வழங்கல் குறித்தும் முக்கியமாக ஆராயப்படும் எனவும் கூறப்பட்டது. ஆனால், தற்பொழுது முக்கிய விவகாரமாக புலிகளின் கப்பல் மூழ்கடிப்புச் சம்பவம் மாறியுள்ளது.

இவ்விரண்டு சம்பவங்கள் மட்டும்தான் - நெடுந்தீவுக் கடற்பரப்பு மற்றும் கப்பல் மூழ்கடிப்பு - சமாதான முட்டுக்கட்டைகளைத் தோற்றுவிப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் எனவும் கொள்ள முடியாது. தாய்லாந்தில் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், மத்திய வங்கிக் குண்டு வெடிப்புத் தொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கு 200 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து சிறிலங்கா நீதிமன்றம் தீர்ப்பளித்தமையும் ஒருவகையில் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கான நடவடிக்கையே ஆகும்.

இந்த ரீதியில் நோக்குகையில், ஆயுதப் படைத் தரப்பிற்கு வெளியில் இருந்தும் கூடச் சமாதான முயற்சிகளைக் குழப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதே வெளிப்படுவதாகவுள்ளது. அத்தோடு, இவற்றின் பின்னணியில் சனாதிபதி சந்திரிகாவின் கைகள் உள்ளன என்பதும் சந்தேகத்திற்கு இடமற்றதொன்றாகியுள்ளது.

சந்திரிகா குமாரதுங்கவின் செயற்பாடுகள் உள்ளன. இதன் மூலம் ஐ.தே. முன்னணி அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை அதிகரிக்க முடியும் என அவர் எதிர்பார்க்கின்றார்.

எடுத்துக்காட்டாக, தற்பொழுது ஜப்பானில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையானது யூன் மாதத்தில் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்குவோரின் மாநாட்டிற்கு அடிப்படையாக அமையக்கூடியதாகும். அதாவது இங்கு சமாதானப் பேச்சுவார்த்தையில் காணப் படும் முன்னேற்றமானது ஜப்பானில் நடை பெறவுள்ள உதவி வழங்குவோர் மாநாட் டில் கிடைக்கக் கூடிய நிதியைத் தீர்மானிக் கத்தக்கதாகும்.

வேறுவிதமாகக் கூறின் தற்போதைய பேச்சுவார்த்தை மூலம் சமாதான முயற்சிகளில் காணப்படும் முன்னேற்றமே நிதி உதவியின் அளவைத் தீர்மானிப்பதாக இருக்கும். இதனை உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி அண்மையில் சுட்டிக்காட்டியும் இருந்தார். "பேச்சு வார்த்தை இல்லையேல் இலங்கைக்கான நிதியுதவியும் இல்லை" என அவர் தெரி வித்திருந்தார்.

ஆனால் ஐ.தே. முன்னணி அரசாங்கம், நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உதவி வழங்குவோரிடம் இருந்து பெருந்தொகைக் கடன் உதவியை எதிர்பார்த்திருக்கின்றது.

வீனப்படுத்துபவையாக அமைந்துவிடக் கூடும்.

இந்நிலையில் தான், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கும், அவை உறுதியான நிலையில் மேற்கொள்ளப்படுவதற்கும் போர் நிறுத்த உடன்பாடு வலுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும். மறுவளமாகக் கூறுவதானால், போர் நிறுத்த உடன்பாடு வலுப்படுத்தப் படாது போனால் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்காலம் கேள்விக்குரியதாக மாறுவது தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும்.

ஆகையினால் தற்பொழுதுள்ள முக்கியமான பிரச்சினையானது போர் நிறுத்த உடன்பாட்டை வலுவாக்குவதாகவே இருக்க முடியும். அவ்வாறு இல்லாது விடில், ஒவ்வொரு பேச்சுவார்த்தையின் போதும் போர் நிறுத்த உடன்பாட்டு மீறல்கள் பற்றியே பிரஸ்தாபிக்க வேண்டியதாக இருக்கும். அதாவது பேர்ளின் பேச்சுவார்த்தையின் போது நெடுந்தீவுக் கடற்பரப்புச் சம்பவம் குறித்தும், ஜப்பான் பேச்சுவார்த்தையில் சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டது/படுகின்றது போல,

இவ்வாறு யுத்த நிறுத்த உடன்பாடு மீறல்கள் ஒவ்வொரு பேச்சுவார்த்தைகளின் போதும் முன்னிலைப் படுத்தப்படுமானால் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் திட்ட

சனாதிபதி சந்திரிகாவின் பங்கு எத்தகையது என்பதும் ஆராயப்பட வேண்டியதாகும். இதனையும் தவிர சிறிலங்கா கடற்படையின் செயற்பாடு ஏனைய ஆயுதப் படையின் நடவடிக்கைகளையும் விடச் சமாதான நடவடிக்கைகளுக்கு விரோதமானவையாகவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

எடுத்துக் காட்டாக, கடந்த இரு கட்டப் பேச்சுவார்த்தையின் முன்னரும் பேச்சுவார்த்தைகளைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் சிறிலங்கா கடற்படையின் நடவடிக்கைகள் இருந்துள்ளன. இதில் ஒன்றில் நெடுந்தீவு கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் மீன்பிடிப்படகை வழிமறித்ததைத் தொடர்ந்து மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இந்நிகழ்வானது, பேர்ளினில் நடந்த ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் கவனத்தைத் திசைதிருப்பிவிட்டதெனலாம். அதாவது, பேர்ளினில் பேச்சுவார்த்தையில் முக்கிய விவகாரமாக நெடுந்தீவுக் கடற்பரப்புச் சம்பவமே ஆராயப்படவேண்டியதாகியது. இதனால், பேர்ளின் பேச்சுவார்த்தை முடிவடைந்தபோது அதில் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் எட்டப்படாததொரு நிலையே காணப்பட்டது.

இதேபோன்றே தற்பொழுது கடந்த 10ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கப்பலைத் தாக்கி மூழ்கடித்ததன் மூலம், ஜப்பானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டைகள் தோற்றுவிக்கப்பட்டன. அதாவது, முதலில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுமா? பெறாதா? என்ற ஐயப்பாடு தோற்றம் பெறவைத்தது. தற்பொழுது பேச்சுவார்த்தை நடைபெறுவதாயினும், விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட விவகாரம் முக்கிய விடயமாக விவாதிக்கப்பட வேண்டிய விடயமாகவும், முடிவொன்று காணப்பட வேண்டிய விடயமாகவும் மாற்றம் கண்டுள்ளது.

ஆனால், ஜப்பான் பேச்சுவார்த்தையின்போது, அரசியல், நிதி விவகாரங்கள்

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து அவர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து இடத்திற்கு ஏற்ற வகையில் இரண்டுவகை நிலைப்பாட்டை வெளிப்படுத்துபவராக உள்ளார். அதாவது, சர்வதேச மாநாடுகள், கொழும்பில் இடம்பெறும் உயர்மட்டச் சந்திப்புக்கள், இராஜதந்திரிகள் மத்தியிலான பேச்சு என்பனவற்றில் சமாதானத்திற்கு ஆதரவானவராகவே தன்னை அவர் வெளிக்காட்ட முனைகின்றார்.

ஆனால், உள்ளூர் அரசியல் வாதிகள் - குறிப்பாகப் பேரினவாத அரசியல் சக்திகள் மற்றும் சிங்கள மக்கள் முன் தோன்றும்போது சமாதானத்திற்கும், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் செயற்பாட்டிற்கும் எதிராகப் பேசுபவராகவும் உள்ளார். இவ்விடங்களில் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைக் கலைக்கத் தயங்கப் போவதில்லை என்னும் அளவிற்கு எச்சரிப்பவராகவும் உள்ளார்.

அடிப்படையில், அவர் சமாதானத்திற்கு எதிரானவராகவும், ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைக் கலைக்க முனைபவராக உள்ளார். ஆகையினால் ஐ.தே. முன்னணி அரசாங்கம் என்ற வகையிலும் விவகாரம் பலப்படுவதை அவர் தடுத்து நிறுத்த விளைபவராகவே உள்ளார். இதேவேளை, ஐ.தே. முன்னணியின் இன்றைய பலமானது விடுதலைப் புலிகளுடன் நடாத்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்பதையும் சனாதிபதி சந்திரிகா புரிந்து கொண்டவராகவே உள்ளார். இந்நிலையில், சமாதான முயற்சிகளில் காணப்படும் ஒவ்வொரு படி முன்னேற்றமும் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைப் பலப்படுத்தும். ஆகையினால் விடுதலைப்புலிகளைச் சீண்டி மோதலை ஆரம்பிப்பதன் மூலம் ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தித் தமது பதவிக் காலத்திற்குள் தோற்கடித்து விடுதல் என்பதே அவரது திட்டமாகும்.

இதன் அடிப்படையிலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் திட்டமிட்ட முன்னேற்றம் காணாத வகையில் அதனைக் குழப்பத் திற்கு உள்ளாக்கும் வகையில் சனாதிபதி

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் இந்நிதி உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் என அது கருதுகின்றது. இதனை அரசாங்கத்தரப்பினர் வெளிப் படையாகவும் கூறியுள்ளனர்.

மாறாக, சனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடானது சமாதானப் பேச்சு வார்த்தைகள் பலவீனமான நிலையில் இருப்பதாக வெளிக்காட்ட முற்பட்டு நிற்கின்றது. இதன் விளைவே சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்பாக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களும், யுத்தநிறுத்த மீறுதல்களும் ஆகும்.

இத்தாக்குதல்கள் மூலம் விடுதலைப் புலிகளைச் சினமூட்டி யுத்த நிறுத்தத்தை அவர்கள் முறித்துக் கொள்ள நிர்ப்பந்திப்பதே சனாதிபதி சந்திரிகாவின் குறிக்கோளாகும். இதன் மூலம், சர்வதேசத் தின் ஆதரவைத் தம்பக்கம் வைத்துக் கொள்ள முடியும் எனவும் - ஐ.தே. முன்னணி அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி கலைத்து விட முடியும் எனவும், விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தில் ஈடுபட முடியும் என அவர் கருதுகின்றார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை முறித்துக் கொள்ள வேண்டும் என விரும்புகின்றார் என்பதும், ஐ.தே. முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சி களின் மூலம் பெரும் தொகை நிதியைச் சர்வதேச நாடுகளிடம் இருந்து பெற்று தன்னை அரசியல் - பொருளாதார - இராணுவ ரீதியில் பலப்படுத்திக் கொள்ள முற்பட்டு நிற்கின்றதென்பதும் விடுதலைப் புலிகளினால் புரிந்துகொள்ள முடியாத தொன்றல்ல.

இதற்காக விடுதலைப்புலிகள் இயக்கம் சிறிலங்கா ஆயுதப்படையினரின் தான் தோன்றித்தனமானதும் யுத்த நிறுத்த உடன்பாட்டு மீறல்களையும், தொடர்ந்து பார்த்துக் கொண்டு இருப்பதென்பது சாத்தியமான தொன்றல்ல. ஏனெனில், இவை தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தையும், விடுதலைப்புலிகளையும் பல

மிட்டவாறு முன்னெடுக்கப்படுவதும், முன்னேற்றம் காணப்தென்பதும் சாத்தியப்பாடற்றதொன்றாகிவிடும். அது மட்டுமல்ல, பேச்சுவார்த்தை மேசையில் இரு தரப்பினர் இடையேயும் புரிந்துணர்வும், நம்பகத்தன்மையும் ஏற்படுவதற்குப் பதில் முரண்பாடுகளும் அவநம்பிக்கைகளும் ஏற்படுவதற்கே வாய்ப்புக்கள் அதிகமாகிவிடும்.

ஆகையினால், தற்போதைய நிலையில், சமாதானப் பேச்சுவார்த்தையில் போர்நிறுத்த உடன்பாட்டை வலுப்படுத்தும் என்பது தீவிரமாகப் பேசப்பட வேண்டிய தொன்றாகவுள்ளது. இதனை சமாதானப் பேச்சுவார்த்தை ஏற்பாட்டாளர்களும் புரிந்து கொண்டுள்ளனர் என்பதையே அவர்களின் அறிவிப்புக்களும் வெளிப்படுத்தியுள்ளன.

இதற்கு " அரசியல் விடயங்களில் அதிக கவனம் செலுத்த அரசியல் ரீதியிலான பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டும். களநிலவரங்களைச் சமாளிக்கக் கூடியவாறு இது அமைய வேண்டும். மோதல் ஏற்படும் போது தவிர்க்கும் விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டி இருப்பதால் இது பற்றியும் ஆராயப்படும். நெருக்கடி நிலை, அவசர நிலை அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு இடை யூறாக அமையலாம்" என்ற நோர்வே துணை வெளிவிவகார அமைச்சரின் கூற்றுக்களைச் சுட்டிக்காட்டமுடியும்.

ஆனால், இது குறித்து சிறிலங்கா அரசாங்கம் ஆக்கபூர்வமான நிலைப்பாட்டை மேற்கொள்ளத் தயாராக இல்லாத இடத்து, சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காண்பதென்பது சிரமம் மிக்கதொன்றாகவே இருக்கும். ஏனெனில் சமாதானப் பேச்சிற்கானதொரு சூழ்நிலை அதிகரிக்கும் யுத்த நிறுத்த மீறல்களினால் படிப்படியாக மறைந்து போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

– ஜெயராஜ் –

# புலிகளுடன் தொடர்பு கொள்வது எந்தவகையிலும் தவறானதல்ல!

## உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புகளை வைத்திருப்பது எவ்வகையிலும் தவறல்ல என்று உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் பீற்றர் கரோல் தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்யப்பட்ட அமைப்பென்றும் அதனோடு தொடர்பு வைத்திருப்பது முறையற்றது என்றும் அண்மையில் எழுந்த குற்றச்சாட்டின் பின்னணியிலேயே அவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார்.

தீவிரவாத இயக்கங்கள் என்று முன்னர் கருதப்பட்ட பலஸ்தீன விடுதலை இயக்கம் மற்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆகிய அமைப்புக்களுடன் உலக வங்கி நேரடியாகத் தொடர்பு வைத்திருந்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட- கிழக்கில் அபிவிருத்தி ஏற்படுத்த வேண்டும் என்றால் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறிலங்கா அரசுக்கு தாங்கள் பதிலளிக்கவேண்டியவர்களாக இருப்பதாகவும், அவர்களின் அனுமதியுடனேயே விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

## புனரமைப்பு

மாங்குளம் பிரதேசத்தில் இந்துபுரம் கமக்கார அமைப்பு புனரமைப்பும், கூட்டமும், நிர்வாகத் தெரிவும் நடைபெற்றன.

கிராம அலுவலகர் சோமநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைவராக எச். ஆர். றேமன், செயலாளராக செ.செல்வப்பிரகாசம்,பொருளாளராக த. தர்மலிங்கம் ஆகியோருடன் ஒன்பது உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (05)



தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கக் கோரி கடந்த வெள்ளி யன்று முல்லை நகரில் இடம்பெற்ற கண்டனப் பேரணியில் பங்கேற்றவர் களில் ஒரு பகுதியினர். (20)

- பெற்றோரிடம் ஒப்படைத்த -

# சிறுவர்களின் விபரங்களைச் சமர்ப்பிக்க கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் இணக்கம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சிறுவர்களின் விபரங்களை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பிக்க விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்ட பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் அம்பாறை மாவட்ட கண்காணிப்பாளரிடம் விடுதலைப் புலிகள் அமைப்பில் உள்ளதாக கருதப்படும் பதினைந்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பித்தபோது, குறிப்பிட்ட சிறுவர்கள் ஏற்கனவே, பெற்றோரிடம் 'யுனிசெவ்' பிரதிநிதிகள் முன்னிலையிலும் வேறு சந்தர்ப்பங்களிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை யாராவது ஒப்படைக்கப்படாது இருந்ததால் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விடுதலைப் புலிகளால் பதிலளிக்கப்பட்டது.

சிறுவர்கள் காணாமல் போனால் தங்களுக்கு அறிவிக்கும் பெற்றோர் வீடு திரும்பினாலோ அல்லது மீள ஒப்படைக்கப்பட்டாலோ தமக்கு அறிவிக்கத்தவறி வருவதால் இது தொடர்பான உண்மை நிலையை தங்களினால் அறியமுடியாது இருப்பதாகப் போர்நிறுத்தக் கண்காணிப்பு குழுவால் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டிய சமயம் இனிமேல் சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும் போது சகல சந்தர்ப் பங்களிலும் போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவுக்கும் அறிவிக்கப்படும் என்று மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்துள்ளார்.

# தேசிய எழுச்சிப் பேரவை மாதாந்த சங்கம நிகழ்வு

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேசத்தில் முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த முதல் மாத சங்கம நிகழ்வு, கடந்த சனியன்று முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ச. கனகரத்தினம் தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலக பெயர்ப் பலகையினை அரசியல் துறையின் தூயவன் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் போராளி அரசண்ணா திரை நீக்கம் செய்து கட்டடத்தினைத் திறந்து வைத்தார். தொடர்ந்து முதல் மாவீரர் லெப். சங்கரின் திருவுருவப்படத்திற்கு முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் நவாஸ் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாப்பு தொடர்பாகவும் பேரவையின் செயற்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர் பாகவும் அரசண்ணா கருத்துரை வழங்கியதையடுத்து ஊரக எழுச்சிப் பேரவைகளின் செயலாளர்களின் உரை இடம்பெற்று, சிறப்புக் கருத்துரையினை கரைதுறைப் பற்று பிரதேச உதவி அரசாங்க அதிபர் செ. காசிப்பிள்ளை முல்லை, மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் நிகழ்த்தினர். (ஆ)

# கால்நடை வளர்ப்போருக்கு இருகட்ட பயிற்சி நெறி

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பகுதி கால்நடை வளர்ப்போருக்கான பயிற்சி வகுப்புகள் இரு கட்டங்களாக நடைபெற்றன. யுனிசெவ் அனுசரணையுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதர வுடனும் முல்லை.அரச கால்நடை வைத்திய அதிகாரி இந்தப் பயிற்சி வகுப்புக்களை நடத்தினார்.

கடந்த 3,12ஆம் திகதிகள் நடத்தப்பட்ட பயிற்சி நெறியில் கோழி, ஆடு, மாடு என்பன வளர்ப்பது பற்றி விளக்கமளிக்கப்பட்டது (05)

# அரச ஊழியர்களுக்கான நஷ்டஈடு குறித்து கிளி. அரச அதிபரிடம் முறைப்பாடு

(வவுனியா)

கண்டாவளைப் பிரதேசத்தில் அரச ஊழியர்களுக்கான நஷ்டஈடு வழங்கப்படுவது தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளைக் கிராம அரச ஊழியர்களில் சிலர் நேற்று முன்தினம் மாலை கிளி நொச்சி அரச செயல கத்தில் வைத்து அரச அதிபருடன் கலந்துரையாடல் ஒன்றினை நடாத்தியுள்ளனர். அக்கலந்துரையாட லின்போதே கண்டாவளை கிராம அரச ஊழியர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நஷ்டஈட்டுக்கொடுப்பனவு தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டாவளை கிராம அரச ஊழியர்களுக்கான நஷ்டஈட்டை வழங்க கிராமசேவை அலுவலர் தயங்குவதாகவும், கொடுப்பனவு தொடர்பான தெளிவான தன்மை கிராமசேவை அலுவலரிடம் இல்லை எனவும், அது தொடர்பான பூரண விளக்கத்தை கிராம சேவை அலுவலருக்கு வழங்க வேண்டும் எனவும், கண்டாவளை மக்களுக்கு இடம்பெயர்ந்த நிவாரணம் வழங்கவில்லை எனவும் கண்டாவளை அரச ஊழியர்கள் கிளிநொச்சி அரச அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம்முறைப்பாட்டைக் கேட்டறிந்த அரச அதிபர் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணம் வழங்குவது தொடர்பான சுற்றறிக்கைக்கு அமைய, நிவாரணம் வழங்க உடன் நடவடிக்கை எடுப்பதாகவும், அரச ஊழியர்களுக்கான நஷ்டஈடு வழங்குவது தொடர்பான முறைப்பாடு குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும், அரச ஊழியர்களுக்கான நட்டஈடு வழங்குவதில் திட்டமிட்ட இழுத்தடிப்பு நிகழுமாயின், அரச ஊழியர்கள் பிரதேச செயலக மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு, தொழில்நுட்ப குழுவிடம் முறைப்பாடு தெரிவிக்க முடியும் எனவும் இது தொடர்பாக பிரதேச செயலருக்கும், கிராமசேவை அலுவலர்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு இதனை விளக்கி மீண்டும் சுற்றுநிருபம் அனுப்பி வைப்பதாகவும் உறுதியளித்தார். (10)


கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு

## சாரதி பதவிக்கான விண்ணப்பம் கோரல்

01. சம்பள குறியீட்டு இல :- 312 - 14
02. சம்பள அளவுத்திட்டம் :- 3750 - 70 x 10 - 75 x 10 = 5200/
03. வயதெல்லை :- 18 - 45
(ஏற்கனவே கூட்டுறவில் பணிபுரிந்தவர்களுக்கு இவ்வயதெல்லை பொருந்தாது)
04. தகைமைகள் :- 05ம் வகுப்பு கல்விச் சான்றிதழுடன் பஸ்/லொறி/ட்ராக்டர் (பெட்டியுடன்) சாரதி அனுமதிப்பத்திரத்துடன் சாரதி தொழிலில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

மேற்காணும் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் மட்டும் விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்து அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை சுயமாகத் தயாரித்த படிவத்தின் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "சாரதி பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ "தலைவர், கிளி/ப.தெ.வ.அ.கூ.சங்கம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 27.03.2003 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகவோ அனுப்பி வைக்க வேண்டும். (சங்க எல்லைப்பரப்பிற்குள் வதிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்).

தலைவர்,
கிளி/ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
கிளிநொச்சி.

(சி-80(9)



## மங்களகரமான திறப்புவிழா

இதுவரை காலமும் முல்லைச்சாலை புதுக்குடியிருப்பில் இயங்கி வந்த எமது ஸ்தாபனமான

"பொன்னரசி நகையகம்"

19-03-2003 (புதன்) இன்று முதல் தனது சேவையை இல.76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஆரம்பிக்கவுள்ளது என்பதை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(2808)

சிந்தனைக்கு

இன்றைய உலக ஒழுங்கைப் பலம் தான் நிர்ணயிக்கிறது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 19-03-2003

## தெரிந்தே மீறப்பட்டது

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது அறிக்கையில் இது ஒரு போர்நிறுத்த மீறல் என்பதை வெளிப்படுத்தாமல் போனமைக்கு இத்தாக்குதல் சம்பவமானது சர்வதேசக் கடற்பரப்பில் இடம் பெற்றிருந்தமை காரணமாக இருக்கலாம். ஆனால் இவ் அறிக்கையானது சிறிலங்கா அரசாங்கம் இவ்விடயத்தில் உண்மை பேசவில்லை என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது.

விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக ஆரம்பம் முதலே சிறிலங்கா அரசாங்கமும் கடற்படையும் ஒன்றிற்கு ஒன்று முரண்பாடானதும், உண்மைக்கு மாறானதுமான தகவல்களை வெளியிட்டே வந்தன. ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளின் கப்பல் 240 மைல்களுக்கு அப்பால் இருப்பதாகக் கடற்படை தெரிவிக்கையில், பின்னர் அரசாங்கம் 185 மைல் தொலைவில் இருப்பதாகத் தெரிவித்தது.

அதாவது கடற்படையின் அறிவிப்பின் பிரகாரம் சர்வதேச கடற்பரப்பில் கப்பல் இருப்பதாக இருந்தது. ஆனால், அரசாங்கத்தின் அறிவிப்பின்படி 185 மைலில் இருப்பதாக இருந்தது. ஆகையினால் இது கப்பல் தாக்கப்பட்ட விவகாரத்தில் தம்மை நியாயப்படுத்திக் கொள்ளக் கூறப்பட்ட பொய்யாகும். அதாவது சர்வதேசக் கடற்பரப்பில் காணப்பட்ட கப்பலை இலங்கைக் கடற்பரப்பிற்குள் காணப்பட்டதாகக் காட்ட விளைந்ததன் விளைவாகும்.

இதே போன்றே தாக்குதல் நடத்திய யுத்தக் கப்பலின் தளபதி, விடுதலைப்புலிகளின் கப்பல் எனத் தமக்குத் தெரிந்திருக்கவில்லை எனக் கூறியுள்ளமையும், பாதுகாப்பு அமைச்சு இக் கப்பல் விடுதலைப் புலிகளின் கப்பல் எனத் தம்மால் அறியப்பட்டிருந்தது எனக் கூறியமையும் ஆகும். அதாவது கடற்படையும், பாதுகாப்பு அமைச்சும் தமக்கு ஏற்ற வகையில் இது குறித்த தகவல்களை வெளியிட்டனர் என்பதே உண்மையாகும்.

ஆனால், இக் கப்பல் தாக்கப்பட்ட விவகாரத்தில் இருந்த அடிப்படை உண்மை என்னவெனில், இக் கப்பல் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமானது என்பதும், இக் கப்பலைத் தாக்கி மூழ்கடிப்பதென சிறிலங்கா கடற்படைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பதுமே ஆகும். இதற்கு அப்பால் வெளிவந்துள்ள தகவல்கள் யாவும் இச் சம்பவத்தினை தமக்கு ஏற்றவிதத்தில் அரசாங்கமும் சரி, கடற்படையும் சரி கூறிக் கொள்ள முயன்றமையே ஆகும்.

வேறொரு தகவலின் படி பார்த்தால், இத்தாக்குதலுக்கு பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் தீர்மானம் எதையும் எடுக்காத நிலையில் சனாதிபதி சந்திரிகாவே நேரடியாக உத்தரவிட்டதாகவும் கடற்படைத் தளபதியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேசியதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. இதை ஊர்ஜிதப் படுத்துமாப்போல் பின்னர் கப்பல் மூழ்கடிப்புத் தொடர்பாக சனாதிபதி செயலகம் தனது மகிழ்ச்சியையும் வெளியிட்டிருந்தது.

இந்த வகையில் பார்க்கையில் கப்பல் மூழ்கடிப்புத் தொடர்பான விடயத்தில் பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பானது சனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்து கப்பல் மூழ்கடிப்பு விவகாரத்தை நியாயப்படுத்த முற்படுவதாகவே உள்ளது. ஆகையினால், இக் கப்பல் மூழ்கடிப்பில் சிறிலங்கா அரசதரப்பு அனைத்துமே யுத்த நிறுத்த உடன்பாட்டைப் புறந்தள்ளத் தயாராக இருந்துள்ளன என்பதே யதார்த்தமாய் உள்ளது.

ஆனால், கப்பல் மூழ்கடிப்புத் தொடர்பான விடயத்தில் உண்மை நிலை அரசாங்கம் கூறுவதற்கு மாறாக இருந்ததன் காரணமாக அரசாங்கத் தரப்பின் பேச்சில் முரண்பாடுகள் வெளிப்பட்டுள்ளன. இவை இக் கப்பல் மூழ்கடிப்பானது போர் நிறுத்த உடன்பாட்டினை மீறும் செயல் என்பதையும், அரசாங்கம் இதனைத் தெரிந்திருந்துமே மேற்கொண்டது என்பதையும் மறைக்கமுடியாது செய்து விட்டது.

விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை தொடர்பாக – யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையானது, சிறிலங்கா அரசதரப்பு யுத்தநிறுத்த மீறல் ஒன்றை மேற்கொண்டது என்பதை சூசகமாகத் தெரிவிக்கும் ஒன்றாகவே உள்ளது. அத்தோடு இவ் அறிக்கையானது, சர்வதேச கடற்பரப்பில் இக் கப்பல் தாக்கப்பட்டுள்ளது என்பதையும், சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சும் – கடற்படையும் இது குறித்து வெளியிட்ட கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரணானவையாகவுள்ளன என்பதையும் வெளிப்படுத்துவதாயுள்ளது.

# 1998க்கு முன்னுள்ள தொண்டர் ஆசிரியரே நிரந்தர நியமனம் கோர தகுதியுடையோர்

**- கல்வியமைச்சின் செயலர் தெரிவிப்பு**

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் அடுத்த இரண்டு வார காலத்திற்குள் கோரப்படும் என்று பாடசாலை கல்வி அமைச்சின் செயலாளர் எச். என். சிறிசேன தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சைப் பெறுபேற்றுடன் 1998ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து தொண்டர் ஆசிரியராக சேவை யாற்றியுள்ளவர்களே நிரந்தர நியமனங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

பரீட்சைப் புள்ளிகளுக்கு மேலதிகமாக ஒரு வருட சேவைக்கு 2 புள்ளிகள் வீதம் கணிப்பிடப்படவுள்ளது. பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# சமாதானத்திற்கு ஆதரவு தெரிவித்து 50 ஆயிரம் பிக்குகளைத் திரட்டுவோம்

**-மாதம்பாகம அசஜிநாயக்க தேரர்**

(கொழும்பு)

சமாதானத்திற்கு ஆதரவாக நாடளாவிய ரீதியில் 50,000 பௌத்த பிக்குகளை ஒன்று திரட்டி அமைப்பொன்றை ஏற்படுத்தப் போவதாக சங்கைக் குரிய பண்டிட் மாதம்பாகம அசஜி நாயக்க தேரர் கூறியுள்ளார்.

சௌமிய இளைஞர் நிதியம் தெரணியகலையில் நடத்திய 85 ஆவது சர்வமத அனுஷ்டானங்களில் கலந்து கொண்டு பேசுகையிலேயே தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், யுத்தத்திற்கு எதிரான பௌத்தகுருமார் அமைப்புப் பணிகளை இன்று போயா தினத்திலிருந்து ஆரம்பிக்க உள்ளதாகவும், அரசும், புலிகளும் மீண்டுமொரு யுத்தத்திற்குச் செல்வார்களானால் அதனைத் தடுப்பதற்காக 50,000 பௌத்த பிக்குகளைத் திரட்டிக் கொண்டு களப்பகுதிக்குச் செல்ல இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

சமாதானத்திற்கு ஆதரவாக 85 சதவீத மக்கள் வாக்களித்துள்ளார்கள். கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி நாடு முழுவதும் சமாதான தீபம் ஏற்றி வைக்கப் பட்டுள்ளது.

அதன் பின்னர் மீண்டுமொரு யுத்த பயம் மக்கள் மனங்களில் கௌவிக் கொண்டுள்ளது. இனியொரு யுத்தம் நடக்குமானால் அது பிக்குகளின் சடலங்களின் மீதுதான் புரிய வேண்டும். எவ்விதத்திலும் யுத்தம் ஏற்படுவதை அனுமதிக்கமாட்டோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# சமாதானத்திற்காக ம.ம.மு. சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளைக் குழப்புகின்ற சக்திகளைக் கண்டித்தும் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கு வழிசமைக்கவும் கோரி மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை மலையக மக்கள் முன்னணி நடத்தவுள்ளது.

இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் இவ்வாரம் காலிமுகத்திடலில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் சமாதானத்தை விரும்புகின்ற அனைத்து இன மக்களும் கட்சி பேதமின்றிக் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மரண தண்டனை அமுலாக்கம் குறித்த தகவலுக்கு பிரதமர் அலுவலகம் மறுப்பு

**-விவாதம் வேண்டுமென்கிறார் அமரதுங்க-**

(கொழும்பு)

மரண தண்டனையை மீண்டும் அமுலாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று சில ஊடகங்கள் மேற்கொள்ளும் பிரச்சாரத்தில் எவ்வித உண்மையும் இல்லை என பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மரண தண்டனையை மீண்டும் அமுல் செய்ய வேண்டுமா என்ற விவகாரம் குறித்து ஒத்திவைப்பு நேர விவாதம் ஒன்றினை நடத்துவது பொருத்தமானதென்று அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பிரேரணை பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 27 நிதி நிறுவனங்களில் நடைபெற்ற நிதி மோசடி விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பொதுநிதியை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் 27 நிதி நிறுவனங்கள் மீது சிறிலங்கா மத்திய வங்கி விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அமைச்சர் பந்துல குணவர்த்தன இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் இந்நடவடிக்கையை சில நிதி நிறுவனங்கள் கடுமையாக ஆட்சேபித்துள்ளன. அத்தோடு, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றம் செல்லவும் ஆலோசித்து வருகின்றன.

இதேசமயம், அரசாங்க வங்கிகள் எதனையும் தனியார் மயமாக்கும் எண்ணம் அரசாங்கத்திற்குக் கிடையாது என அமைச்சர் பந்துல குணவர்த்தன வலியுறுத்திக் கூறியுள்ளார்.

## இரு பிக்குகளை கைது செய்யப் பணிப்பு

(கொழும்பு)

மிகுந்தலை இராஜமகா விகாரையின் பிரதம குரு சங்கைக்குரிய நாமல்விவ இரத்தின சார தேரரையும் அந்த விகாரையின் மற்றுமொரு பிக்குவான சங்கைக்குரிய பலகிங்குருவெவ தர்மரட்ண தேரரையும் கைது செய்யுமாறு மிகுந்தலைப் பொலிசாருக்கு அநுராதபுர நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்த இரு பிக்குகளும் பௌத்த ஆலயங்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொல் பொருட்களுக்கு சேதம் விளைவித்ததாக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த பின்னர் நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.


# முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலெனின் படை முகாங்கள் அகற்றப்படமாட்டாது

**-பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன-**

(கொழும்பு)

படை முகாங்கள் அகற்றப் படுவது முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுமாயின் அவை அகற்றப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் அரச மற்றும் தனியார் கட்டடங்களில் இருந்த படையினர் வெளியேறு கின்றனர் என்றும், எனினும் முஸ் லிம் மக்களின் அச்சுறுத்தலுக்கு ஏதுவாக எந்தவொரு படை முகாமும் அகற்றப்படமாட்டாது என்றும் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.



அகாஷி, அன்ரன் பாலசிங்கம் சந்திப்பு

## திருத்தம்

நேற்று முன்தினம் இடம்பெற்ற தவறுதலான விபத்தில் சாவடைந்த போராளியின் சொந்தப் பெயர் தயாளினி ஆகும். சுயாதினி என தவறாக இடம்பெற்றுள்ளது.

-உலகக்கிண்ண கிறிக்கெற் போட்டி-

# அரையிறுதிப் போட்டியில் சிறிலங்காவை அவுஸ். வென்றது.

உலகக்கிண்ண கிறிக்கெற் போட்டியில் நேற்று சிறிலங்கா அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான அரையிறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 48 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 7 விக்கற் இழப்பிற்கு 212 ஓட்டங்களைப் பெற்றது இதனைத்தொடர்ந்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி 38.1 ஓவர்களில் ஏழு விக்கற்றுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றநிலையில் மழைபெய்யத் தொடங்கியதால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதனையடுத்து போட்டிகள் டி.எல் மதிப்பீட்டு ஒழுங்கின்படி அவுஸ்திரேலிய அணி 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதன் மூலம் அவுஸ்ரேலிய அணி இறுதியாட்டத்தில் பங்கு பற்றும் தகுதியைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை இந்திய அணிக்கும் கென்யா அணிக்கும் இடையில் நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியை அவுஸ்திரேலிய அணி இறுதி ஆட்டத்தில் சந்திக்கும்.

## கப்பல் மூழ்கடிக்க...

ஆகவே சர்வதேச கடற்பரப்பில் எமது வர்த்தகக்கப்பலைத் தடுத்து அதன் மீது தாக்குதலை நடத்தி அதை அழித்தது. போர் நிறுத்த உடன்பாட்டை மட்டுமன்றி சர்வதேச கடல் நியமங்களையும் மீறுவதாக அமைகிறது என்று எடுத்து விளக்கினோம்.

இரண்டாவதாக, அரசாங்கம் சொல்லுகின்ற 185 கடல்மைல் என்ற தொலை தூரம், பல தடவைகள் முரண்பாடான தூரங்களைத் தந்து இறுதியாகத் தமது பொருளாதார வலயத்திற்குள் நிகழ்ந்ததாகக் குறிப்பிடுவதற்கு கொடுத்திருக்கிறார்கள். அதை நாங்கள் நிராகரித்திருக்கின்றோம்.

அடுத்ததாக, கண்காணிப்புக் குழு வெளியிட்ட தீர்ப்பையும் நாங்கள் அரச பிரதிநிதிகளுக்கு எடுத்துக்காட்டினோம். அதாவது கண்காணிப்புக்குழுவினர் இது புலிகளின் வர்த்தகக் கப்பல் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இரண்டாவது, சிறிலங்கா அரசும் கடற்படையும் கண்காணிப்புக்குழுவை இந்தச் சம்பவத்திற்கு அழைக்காமல் தான் தோன்றித்தனமாக முடிவெடுத்ததையிட்டும் சூசகமாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அத்தோடு, இந்தக் கப்பல் ஆயுதங்களைக்கொண்டு சென்றது என்பதற்கு ஆதாரமில்லை என்றும் சொல்லியுள்ளார்கள். ஆகவே இது கண்காணிப்புக் குழுவை மிஞ்சி தனித்துவமாக, சுயேச்சையாக ஒருதலைப்பட்சமாக எடுத்த நடவடிக்கை. ஆகவே இதனைத் தவறானதென்றும் நாங்கள் குறிப்பிட்டோம். அடுத்ததாக, எங்களைப் பொறுத்தவரை இது மிகவும் பாரதூரமான சம்பவமாக இருந்தபோதும் இந்தச்சம்பவத்தின் அடிப்படையில் நாங்கள் எதிர்த்தாக்குதல் ஒன்றையும் நடத்தாமல் பொறுமையாக, நிதானமாக அமைதியைப் பேணி இந்தப் பேச்சுவார்த்தையைத் தொடரவேண்டும் என்று முடிவெடுத்துவந்தமை விடுதலைப் புலிகள் எந்தளவிற்குப் பேச்சுவார்த்தைகளிலும் சமாதான வழியில் தீர்வு காண்பதிலும் உறுதியாக, திடமாக இருக்கிறார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தோம்.

பேராசிரியர் பீரிஸ் அவர்கள் கடற்படையினரின் நிலைப்பாட்டை வலியுறுத்தினார். அதாவது, தமது கடற்படை பிரதேச ஒருமைப்பாட்டையும் இறையாண்மையையும் பாதுகாக்க எடுத்த நடவடிக்கை என்று சொன்னார். அப்படித்தான் எடுத்துக் கொண்டாலும் ஒப்பந்தத்தில் குறிப்பாக சொல்லப்படுகிறது. சிறிலங்கா அரசு தனது இறையாண்மையைப் பேணலாம். ஆனால் புலிகள் மீது எந்தவிதமான வலிந்து தாக்குதலையும் நடத்தக்கூடாது என்று. இதனை ஒப்பந்தத்தின் சரத்து 1.3 தெளிவாகச் சொல்கின்றது. அதையும் சுட்டிக்காட்டி இது நீங்கள் அதாவது, எங்கள் ஒரு வர்த்தகக் கப்பல் மீது தாக்குதலை நடத்துவது மிகவும் மோசமானதொரு நடவடிக்கை. இதில் நீங்கள் அரசு என்றபடியால் கடற்படையை ஆதரித்துப் பேசுகிறீர்கள் அது தவறு. ஆனால் இப்படியான நடவடிக்கை இனி நடக்காது பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் எடுத்துக் கூறினோம். இதன் அடிப்படையில் ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இனிமேற் கொண்டு இப்படியான சம்பவம் நடக்காமல் தடுப்பது என்று சொன்னால் கண்காணிப்புக் குழுவிற்கு சில அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும். அதாவது, குறிப்பாக கடல் பிரதேசத்திலேயோ, தரைப் பிரதேசத்திலேயோ நடக்கின்ற யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களை அவர்களாக விசாரித்து, அவர்களாக முடிவு எடுக்கும்படி நாங்கள் இரண்டு தரப்பும் அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும். இதில் நீங்கள் தன்னிச்சையாக, தான் தோன்றித்தனமாக ஒரு தலைப்பட்சமாக தலையிடுவது, தாக்குதலை நடத்துவது அல்லது எமது போராளிகளைக் கைது செய்து பொலிசில் ஒப்படைப்பது என்பனவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. இனி இரண்டு தரப்பும் கண்காணிப்புக்குழுவுடன் ஒரு மாநாட்டைக் கூட்டி போர்நிறுத்த ஒப்பந்தத்தை மாற்றியமைக்காமல் அப்படியே இருக்க கூடுதலாக சில கடப்பாடுகள் - நிபந்தனைகளை வரையறைகளை கண்காணிப்புக்குழுவிற்கு வழங்கி அவர்களையே முழுமையாக யுத்தநிறுத்தத்தைப் பேணும்படி செய்வோம் என நாங்கள் யோசனை தெரிவித்தோம். அதனை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது. அதன் பிரகாரம் இன்னும் மூன்று வாரங்களுக்குள் இந்தக் கண்காணிப்புக்குழுவும்; விடுதலைப் புலிகளும், சிறிலங்கா அரசாங்கமும், கடற்படையும் சேர்ந்து கிளிநொச்சியில் ஒரு கூட்டம் ஒன்றை நடாத்தி அதில் சில முக்கியமான முடிவுகளை எடுத்து கண்காணிப்புக்குழுவிற்குச் சில அதிகாரங்களைக் கொடுப்பதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் பற்றி எடுத்துப் பேசினோம். அதாவது உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியில் உள்ள பிரதேசத்திலிருந்து கூட இன்னும் இராணுவம் வெளியேறவில்லை. அதைப் பற்றி ஒரு தீர்க்கமான முடிவும் இல்லை. ஜெனரல் நம்பியாரின் அறிக்கை இன்னும் வரவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினை இப்படி இழு பட்டுக் கொண்டு போவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. ஏனென்று சொன்னால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெருந்தொகையான இடம்பெயர்ந்த மக்களும், அகதி மக்களுமாக தங்களது சொந்த வீடுகள் கிராமங்களுக்கு திரும்ப முடியாமல் அவலப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் நீங்கள் இந்தப் பிரச்சினையை இழுத்துக் கொண்டிருக்கின்றீர்கள். மற்றது நம்பியாரின் அறிக்கை இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் வெளியிடப்படும் என சில அறிக்கைகள் வெளிவந்தன. ஆனால் இன்னும் அந்த அறிக்கை வெளிவருவதாகக் காணவில்லை. எப்போது வெளிவரும் என்று நாங்கள் அரச பிரதிநிதியான அமைச்சர் மிலிந்த மொறகொடவைக் கேட்டோம் அவர்தான் நம்பியாருடன் தொடர்புகளை வைத்துள்ளார். இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் நிச்சயமாக அந்த அறிக்கை தரப்படும். அடுத்த பேச்சுவார்த்தைக்கு முன்னர் அந்த அறிக்கை வெளியிடப்படும் அந்த அறிக்கையில் என்ன மாதிரியான யோசனைகளை அவர் தெரிவிக்கின்றார் என்பதை நாங்கள் பார்க்கலாம். அதைப்பற்றி பேச்சுக்களை நடத்தலாம் மற்றும் இராணுவத்தை வெளியேற்றுவது சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயன்று கொண்டிருக்கிறது. நாங்கள் இதை வேண்டுமென்று பின்போடவில்லை. இதிலுள்ள சிக்கல்களைக் கண்டுபிடித்து இதில் நாங்கள் ஏற்றுக் கொண்டமாதிரி சில வீடுகளிலிருந்து வெளியேறி மக்களைக் குடியமர்த்துவதற்கு முயற்சிகளை எடுப்போம் என்று அரச பிரதிநிதிகளால் சொல்லப்பட்டது. தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் பற்றியும் பேசினோம். நாங்கள் போடும் அழுத்தங்கள் காரணமாகவும் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக அகற்றிவிடவேண்டும் என்று சொன்னோம். அதற்கு அவர்கள் அதை மாற்றியமைப்பதற்கான சில யோசனைகள் பற்றி சிந்தித்து வருகிறோம். அது மனித உரிமையுடன் சம்பந்தப்பட்டுள்ளதால் அதை மாற்றியமைப்பதற்கான சில ஒழுங்குகளைச் செய்வோம் என்று எமக்கு அரசபிரதிநிதிகள் வாக்குறுதி தந்துள்ளனர்.

இன்று எமது மக்களின் புனர்வாழ்வு புனரமைப்பு சம்பந்தமான 'சிரான்' குழுவின் செயற்பாடுகள் பற்றியும் இந்த 'சிரான்' குழுவிற்கு மேலதிக அவர்களது செயற்பாட்டை விஸ்தரிப்பது சம்பந்தமாகவும் யப்பானில் யூன் மாதம் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் எத்தகைய கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும் என்பது பற்றியும் இரண்டாம் நாள் பேச்சில் தீர்மானிக்க இருக்கின்றோம். இரண்டாம் நாள் மாநாட்டில் ஜப்பானிய விசேட தூதுவர் திரு. யசுகி அகாஷியும் கலந்து கொள்கிறார். ஆகவே இந்த மாநாட்டில் நிதானமாக புனர்வாழ்வு, புனர்நிர்மாண மீள்குடியேற்றம் போன்ற அவசர பிரச்சினைகளையும் அதற்கான நிதி ஒதுக்கீடுகள், வேலைத்திட்டங்களை அமுல்செய்வது. வெளிநாட்டு உதவிகளைப் பெற்று வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்துவது போன்ற சில முக்கியமான விடயங்கள் ஆராயப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

## இராணுவத்தை...

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை சம்பந்தமாக ஆராயப்பட்ட போதே அரச தரப்பு பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளதோடு இதற்கான ஒரு திட்டத்தையும் அரச பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அரசாங்க பிரதிநிதிகளால் வழங்கப்பட்ட இத்திட்டம் குறித்து இரண்டாம் நாள் பேச்சுவார்த்தையின்போது அதாவது இன்றைய பேச்சுவார்த்தையின்போது புலிகள் அரசாங்க பிரதிநிதிகளோடு விரிவாக ஆராயவுள்ளனர்.

## அன்னை பூபதி...

சுடரேற்றல் தேசியக் கொடியேற்றல், திருவுருவப்படத்திற்குச் சுடரேற்றி மாலையிட்டு மலர் தூவி அகவணக்கம் செலுத்தல் என்ற ஒழுங்கில் நிகழ்வுகள் நடைபெறும். இதனையடுத்து கருத்துரைகள் நடைபெறும்.

இதனைவிட கிராம ரீதியாக உண்ணாவிரதங்கள், சிரமதானங்கள் என்பனவற்றுக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## அடுத்தசுற்று...

இதுகுறித்து நேற்று ஜப்பானில் நடைபெற்ற ஆறாவது சுற்றின் முதல் நாள் பேச்சுவார்த்தையில் இருபகுதியினரும் இணக்கம் கண்டு முடிவுஎடுத்துள்ளனர்.

நேற்று ஆரம்பமான ஆறாவது சுற்றின் முதல் நாள் அமர்வைத் தொடர்ந்து மேலும் ஐந்து அமர்வுகளாக பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

## யுத்தநிறுத்த...

ளின் கடப்பாடுகளும், பொறுப்புக்களும் அதிகரிக்கப்படுதல் வேண்டும் எனவும் விடுதலைப்புலிகள் வலியுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்தே அரசாங்கத்தரப்பு இவ் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளது. இதன்பிரகாரம், போர்நிறுத்த உடன்பாட்டை மாற்றாது அப்படியே இருக்க, கூடுதலான அதிகாரங்கள் சிலவற்றை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு வழங்கி அதன் கடப்பாடுகளை அதிகரிப்பதென இணக்கம் ஏற்பட்டது.

இது குறித்து இறுதி முடிவை எடுப்பதற்கென மூன்று வார காலத்திற்குள் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும், கடற்படையும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் பேசி இறுதி முடிவுகளை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.


## இலவச கணினிப் பயிற்சி

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவினரால் நடாத்தப்படவுள்ள இலவச கணினிப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றான.

**தகைமை :**

க.பொ.த.(சா/த) பரிட்சையில் தமிழ்மொழி, ஆங்கிலமொழி உட்பட 6 பாடங்களில் தேர்ச்சி. விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத்திகதி 25.03.2003.

**ப.அரியரத்தினம்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

(சி.8021)

## முக்கிய கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் (விசுவமடு, வட்டக்கச்சி, கிளிநொச்சி, பளை, பூநகரி, முழங்காவில், கந்தபுரம்) உள்ள தனியார் வாடகைப்பணி செய்யும் உந்துருளி, ஆட்டோ ஆகிய வற்றின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் 23-03-2003 ஆம் நாள் ஞாயிறு மாலை 3.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவிருப்பதால் தவறாது கலந்துகொள்ளுமாறு தங்களை வேண்டுகின்றோம்.

**முகாமையாளர்,**
**பயணியர் போக்குவரவு ஊர்தி**
**வழியனுமதிப்பணியகம்.**

(சி-8022)

## முக்கிய கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தில் (விசுவமடு, வட்டக்கச்சி, கிளிநொச்சி, பளை, பூநகரி, முழங்காவில், கந்தபுரம்) உள்ள தனியார் பயணியர் ஊர்தி வாடகைப் பணி செய்யும் கையஸ் டொல்பின் ஆகிய உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் 23-03-2003 ஆம் நாள் ஞாயிறு காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவிருப்பதால் தவறாது கலந்துகொள்ளுமாறு தங்களை வேண்டுகின்றோம்.

*முகாமையாளர்,*
*பயணியர் போக்குவரவு ஊர்தி*
*வழியனுமதிப்பணியகம்.*

(சி-8023)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.